கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

கார்த்திகை மாத இதழ்
NEWS BULLETIN
NOVEMBER 2023
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
2002 முதல் 21 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA எனும் முகவரியில் நடைபெற்று வருகின்றது
16/12/23	காலை 10 மணிக்கு ஒளி விழா நடைபெறும். அதனைத்தொடர்ந்து தமிழ்ப் பாடசாலை நடைபெற்று நத்தார் விடுமுறைக்காக மூடப்படும்.
06/01/24	தமிழ்ப் பாடசாலை புதிய தவணைக்காக ஆரம்பமாகும்.

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (Mr. Gowry Shankar.T teacher)	10.00am – 11.00am





அடக்குமுறைகளைக் கண்டு
அடங்காச் சினம் கொண்டு
பொங்கி எழுந்த தேசியத் தலைவருக்கு



மாவீரர்களுக்கு மலர் வணக்கம்

தேச விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்து 25/11/2023 அன்று தமிழ்ப் பாடசாலையில் மலர் வணக்க நிகழ்வு நடைபெற்றது. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் விளையாட்டு இணைப்பாளர் திருமதி விஜிதா இரவீந்திரன் அவர்களின் தலைமையில், ஆசிரியர்கள் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.



மாவீரர்களுக்கான ஈகைச்சுடர்களை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் சிரேஷ்ட உப தலைவரும், ஆசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்களும், மாவீரரின் சகோதரும், பெற்றோருமான திரு கேதீஸ்வரன்(ஈசன்) அவர்களும், முன்னாள்

போராளியும் பெற்றோருமான திருமதி ஆனதி அவர்களும் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. மாவீரர் தினம் பற்றி திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்களும் திருமதி ஆனதி அவர்களும் கருத்துரைகள் வழங்கினார்கள்.



செல்வி அபிஷயா இரவீந்திரன் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.



நிகழ்வுகளின் வரிசையில், செல்வன் பவிசன் அரவிந்தன் பேச்சையும், செல்வி சிந்துஜா அகிலன் கவிதையையும், செல்வன் அனுஜன் ஜெயசங்கர் பேச்சையும், செல்வன் கவிசன் மயூரன் பாடலையும் செல்வி வர்ஷிதா ஜெயசங்கர் வயலின் இசையையும்,



செல்வி சபீனா கோகிலநாதன், செல்வன் ரெதுஷன் ரவீந்திரன், செல்வன் லக்ஸன் திருவரங்கன், செல்வி அருஷ்னி விஜயரூபன் ஆகியோர் இணைந்து பாடலையும், செல்வன் பிரணவ் செல்வ மாரியப்பன், செல்வன் நீரஜன் பகீரதன், செல்வி லக்ஸ்மிதா உருத்திரன் ஆகியோர் இணைந்து கவிதையையும், செல்வன் ஜவிசன் ரவீந்திரன் கவிதையும், செல்வி ஓவியா இரவீந்திரன், அபிஷயா இரவீந்திரன் ஆகியோர் இணைந்து நடனத்தையும் வழங்கியிருந்தனர்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன் அவர்களும், திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் ஆசிரியை அவர்களும் கவிதையை வழங்கியிருந்தார்கள்.



சங்க இலக்கியப் பதிவு - 33

நீத்தார் வழிபாடு

போற்றுதலுக்குரிய செயல்கள் செய்து வீர மரணம் அடைந்தோரைத் தெய்வமாக வழிபட்டது நமது பண்டைய தமிழரினம். தொல்காப்பியர் காலம் தொட்டு இருந்து வந்த இந்த மூத்தோர் வழிபாடானது நமக்கு முன்னர் வாழ்ந்து, எமது குடிகளைக் காத்து மடிந்த வீர மறவர்களை மூத்தோராகக் கொண்டு தலைமுறை, தலைமுறையாகத் தொடர்ந்த மரபே நடுகல் வழிபாடு ஆகும். இதுவே பிற்காலத்தில் கிராமியத் தெய்வ மரபாகவும், குலதெய்வ வழிபாட்டு முறையாகவும், எம்மைக் காக்கும் காவல் தெய்வமாகவும் மாற்றம் பெற்று இருக்கின்றது. தொன்று தொட்டு வழங்கி வந்த எமது வீர மறவர் வழிபாட்டினை இக் கார்காலத்தில், கார்த்திகை மாதத்தில் காண்பது தேவையாகின்றது.

புறநானூறு 329

மாப்புகை கமழும்
“இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடை நடுகல்லில் நாட்பலியூட்டி”

என வரும் இந்தப் பாடலில் பெயரும் புகழும் எழுதப்பட்டு மயில் இறகு சூட்டிய கேடயங்கள் தொங்கும் ஊன்றிய வேல்களால் சூழப்பட்டு நடுகல்கள் இருக்கும். நல்ல நீரால் நடுகல்லைக் கழுவி, சிறிய வீடுகளில் கள் தயாரித்து நடுகல்லிற்கு தினமும் படைப்பர். நறுமண எண்ணெய் கொண்டு விளக்கு ஏற்றுவார்கள். அதன் கருமையான பெரும் புகையானது நறுமணத்தோடு தெருக்கள் எங்கும் கமழும் என இந்தப் பாடல் கூறுகிறது.

புறநானூறு 335

கடவுளும் இலவே
“கல்லே பரவினல்லது நெல்லுக்குத்தப்
பரவும் கடவுளும் இலவே”

என மாங்குடி மருதனார் பாடுகின்றார். குரவு தளவு, குருந்து, முல்லை ஆகிய நான்கு மலர்களைத் தவிர வேறு மலர்கள் இல்லை. கரிய அடிப்பகுதியை உடைய வரகு, பெரிய கதிரினை உடைய தினை, சிறு கொடியில் விளையும் எள், புள்ளிகள் நிறைந்த அவரை இந்த நான்கினைத் தவிர உணவுப் பொருட்களும் இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற இந்த நான்கல்லாத வேறு குடிகள் இல்லை. மனம் பொருந்தாப் பகைவர் முன்னே அஞ்சாமல் நின்று அவர் படையெடுப்பைத் தடுத்து, விளங்குகின்ற உயர்ந்த கோட்டினை உடைய யானைகளைக் கொன்று, தாமும் விழுப்புண் பட்டு இறந்தவர்களின் நடுகல்லைத் தவிர, யாம் நெல் தூவி வழிபடுவதற்கேற்ப வேறு கடவுளும் இல்லை. என்பது இந்த பாடலின் பொருளாகும்.

அதாவது நடுகல்லில் வாழும் வீர மறவர்களைத் தவிர வேறு கடவுள் எதுவும் உங்களுக்கு கிடையாது என முல்லை மண்ணில் பாடுவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

அத்தோடு நடுகல் வழிபாட்டைப் பாடி இருப்பதால் அது மறவர்கள் வாழ்ந்த ஊர் என்றும், அது பகைவர்கள் தாக்க முடியாத இடம் என்பதையும் புலவர் பாடலில் வேறு பகுதியில் உணர்த்துகின்றார்.

அன்றைய காலங்களில் மயில் பீலிகளைக் கொண்டு நடு கற்களை அலங்காரம் செய்திருக்கின்றனர். “நடுகல் பீலிசூட்டி நாரரி சிறுகலத்துக் குப்பவும்”
என வரும் பாடலில் ஔவையார் குறிப்பிடுவது, “அதியமான் சிறிய கிண்ணத்தில் கள் கொடுத்தால் ஏற்றுக் கொள்வானா? பெரிய நாட்டையே கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளாதவன் அவன்”. என்று பாடுகின்றார்.

இதில் ஒன்றை நாம் உற்று நோக்கலாம். இதற்கு முந்தைய ஒரு பதிவில் நாம் பார்த்தது போல, எமது பண்டைய மூதாதையர் தாம் வழமையாக விரும்பி உண்டு வந்ததை, விரும்பிக் குடித்ததை இறைவனுக்குப் படைத்திருக்கின்றார்கள். அதாவது மாமிசம், கள் போன்றவற்றை அவர்கள் விரும்பிச் சாப்பிட்டு அவற்றை இறைவனுக்கும் படைத்திருக்கின்றார்கள். அதுபோலவே காவல் தெய்வமாக விளங்கும் அந்த நடுகற்களுக்கும் படைத்து வழிபட்டு இருக்கின்றார்கள்.

திருக்குறளில் தெய்வத்துள் வைக்கப்படுபவர்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

. என திருவள்ளுவர் கூறுகின்றார். தெய்வத்துக்கென எத்தனையோ அருங்குணங்கள் உள்ளன. அப்படி உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்பவன் அதாவது தெய்வத்தின் அருங்குணங்களில் மிகப் பெரும் குணம் கொடை என்பதாகும். அது போல தமது உயிரையே மண்ணுக்காக மக்களுக்காக கொடையாக்குவது மிகப்பெரிய அறமாகும். அப்படிச் செய்பவர்கள் வானில் வாழ்வதாக சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவார்கள்.

ஆகவே தான் இந்த வாரத்தில் நமது வீர மறவர்களைக் காந்தள் மலர் கொண்டு அஞ்சலிக்கின்றோம். இந்தக் காந்தள் மலரானது முருகன் அணியும் மாலையாக இருந்திருக்கின்றது. “காந்தளங்கண்ணிச் சென்னியன்” என முருகனை அழைத்து இருக்கின்றனர். வேல் வழிபாட்டில் பசுந்தளைக் காந்தள் இட்டு பூக்களைக் கட்டி வேலை மையமாகக் கொண்டு வழிபட்டு வந்திருக்கின்றனர். இப்படிப் பல பாடல்களில் பல புலவர்கள் காந்தள் மலரைப் பாடியிருக்கின்றனர்.

கார்த்திகை பதினொன்றில் செவ்விதழ்ப் பூவான “பொப்பி” மலரை வைத்து, இங்கிலாந்தில் நினைவுக் குறியீடாக அணிந்து போரில் உயிர் தியாகம் செய்த படை வீரர்களையும் மக்களையும் நினைவு கூறுவர்.

இங்கு பொப்பி மலர்கள் போல, எம்மண்ணில் கார்காலக் கார்த்திகை மாதத்தில் பச்சைப் பசேல் மண்ணில் தமிழீழத் தேசியப் பூக்களான கார்த்திகைப் பூக்கள் பூத்து நிற்கும். அதுபோலவே, திருக்கார்த்திகை தீப வழிபாடும் இந்தக் கார்த்திகை மாதத்தில் அமைந்து நிற்கும். எமது முதல் மாவீரர், வீர மரணம் எய்திய நாளும் கார்த்திகை 27 என்பதால் காலத்தால் முற்பட்ட இந்தக் காந்தள் மலரையும், திருக்கார்த்திகை தீபத்தையும் சேர்த்து வைத்து நாம் வழிபடுவது ஓர் சிறப்பம்சம் ஆகும்.




மிகப் பழமையான நீத்தார் வழிபாட்டை கொண்ட நாம், தேசியக்கொடியின் வண்ணத்தில் மஞ்சளும் சிகப்பும் கொண்ட கார்த்திகை மலரை, இலக்கியங்கள் கொண்டாடும் இந்த காந்தள் மலரை, தொன்று

தொட்டு இறைவனைப் பூசித்து வந்த காந்தள் மலரை வைத்து அஞ்சலி செய்தும், திருக்கார்த்திகைச் சுடரேற்றி அஞ்சலி செய்தும் எமது வீர மறவர்களை நினைவில் ஏந்துவோம்.

நன்றி.

திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன்
சிரேஷ்ட உப தலைவர், தமிழாசிரியை
கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.

ஈழத்து புலமைகள். (பாகம் 14)

கடந்த இதழிலே!

யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்த நிர்வாகத்துறை அதிகாரியும், சிறந்த புலவருமாகிய வில்லவராய முதலியாரின் அருந்தவப் புதல்வரும் "இளங்கவி" "பிறவிப்புலவர்" என அறிஞர்களாலும் புலவர்களாலும் புகழப்பட்ட சின்னத்தம்பி புலவர் பற்றிப்பார்த்திருந்தோம்.

சின்னத்தம்பி புலவர் (தொடர்ச்சி)

ஒரு முறை வில்லவராய முதலியார் கவிதை ஒன்றின் இரண்டு அடிகளை எழுதிவிட்டு மீதி இரண்டு வரிகளையும் எழுதாமல் வைத்துவிட்டு வெளியூர் சென்றிருந்தாராம். மீண்டு வந்து பார்த்த போது மீதி இரண்டு வரிகளும் எழுத்ப்பட்டிருந்ததைக் கண்டு தன் மகனை நினைத்து பெருமையடைந்தாதராம்.

சின்னத்தம்பிப் புலவர் யாரிடம் கல்வி கற்றார் என்பதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. இருந்தாலும் இலக்கணத்தையும் ,இலக்கியத்தையும் மிக நேர்த்தியாகக் கையாளும் திறமை மிக்கவர் என்பதை இவர் பாடிய பிரபந்தங்களால் அறிய முடிகிறது.

இவரால் கரவை வேலன் கோவை, மறைசையந்தாதி, கல்வளையந்தாதி,பறாளை விநாயகர் பள்ளு என்பன பாடப்பட்டுள்ளன. மறைசையந்தாதி; இப்பிரபந்தமனது யாழ்ப்பாணம் தென்மராட்சி, வரணி சைவ மடத்தினரால் பரிபாலிக்கப்படுவதும், தென் இந்திய கோடிக்கரைக்கு அண்மித்ததும் திருஞான சம்பந்தரால் திருக்கதவம் திறக்கப்பாடப்பட்டதும், திருமறைக்காடு என இலக்கியங்களில் குறிப்பிடப்படுவதுமான வேதாரணியம் என்னும் திருத்தலதில் வீற்றிருக்கும் வேதாரணியேஸ்வரர் மீது பாடப்பட்டதாகும்.

இந்த நூலிற்கு யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அ.சிவசம்பு புலவராலும், மதுரை மகா வித்துவான் சபாபதி முதலியாரவர்களாலும் முன்னுரை எழுதப்பட்டுள்ளது..

கல்வளையந்தாதி;

இப்பிரபந்தம் யாழ்ப்பாணதில் உள்ள சண்டிருப்பாய் (சண்டிலிப்பாய்) என்னுமிடத்தில் அமைந்துள்ள கல்வளை வினாயகர் மீது பாடப்பட்டது. இந்நூலிற்கு யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இயற் தமிழ் போதகாசிரியர் ஸ்ரீ வைத்திலிங்கம் பிள்ளை அவர்களால் உரை எழுதப்பட்டுள்ளது.

கரவைவேலன் கோவை;

இந்நூல் யாழ்ப்பாணம் கரவெட்டியில் வாழ்ந்த பிரபு திலகர் வேலாயுதம் பிள்ளை அவர்கள் மேல் பாடப்பட்டது. இக்கோவையை அரங்கேற்றியபோது, ஒவ்வொரு செய்யுட்கும் ஒரு பொற்காசு பரிசிலாக வழங்கப்பட்டதாம். இதில் பல செய்யுள்கள் சுன்னாகம் குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் நடத்தப்பட்ட "செந்தமிழ்' எனும் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.

"மாசாலமோ மணிவாய் நோகுமோ நும் மரபியலின்
ஆசரமோ விரதத்தடை வோதிரையடை சுற்றுந்
தேசாதிபர் மெச்சும் வேலன் கரவை சிலம்பனையீர்
பேசாதிருக்கும் வகை யின்னவாறென்று பேசிடுமே"
"பூவென்ற மாலிலங்கேசனை நாளக்குப் போர் புரிய
வாவென்ற வீரன் கரவயில் வேல் மகி பதி மேற்
பாவென்ற வாணி பவ ளச் செவ்வாய் மடப்பாவையிவள்
ஏவென்ற காதள் வோடிய பார்வையிமைக்கின்றதே"

இந்நூல் சிறந்த அரும்பதவுரையோடு ஆரிய திராவிட பாசா விருதி சங்க ஸ்தாபகரும் வித்தியாதரிசியுமான ஸ்ரீமன் திரு சதாசிவ ஐயர் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பறாளை விநாயகர் பள்ளு :பெண்கள் குரவை ஆட்டம் ஆடும்போது பாடும் பாடலே பள்ளுப்பாட்டு. நான் முதற் கூறியவாறு பறாளை வினாயகர் மீது பாடபட்ட இக்குரவைப்பாட்டுக்களில் சில:

"பகுத்த வந்தணர் சாலைகடோறும்
பயிலு வேதத் தொலி பண்ணை மீதிற்
தொகுத்து மள்ளர் குரவையை மற்றிடு
சோழமண்டல நாடெங்க நாடே
பண்ணிற்றோயப்ப் பொன்முடிப்புக்கட்டி
பாடும் பாவர்க்கீந்திடவென்றே
யெண்ணிப் பொன் முடிப்புக்கட்டிடு
மீழமண்டல நாடெங்க ணாடே"

இப்பள்ளு சென்னை ஸ்ரீமன் செ,வே.ஜம்புலிங்கம் பிள்ளையவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இவரும் வரத பண்டிதரும் ஒரே காலத்தவர்கள் என்பது தெளிவு. வரத பண்டிதரால் எழுதப்பட்ட சிவரத்திரி புராணத்திற்கு சிறப்புப்பாயிரம் எழுதியுள்ளமையூடாக தெளீவாகிறது.

சிவராத்திரி புராணத்திற்கு எழுதிய சிறப்புப்பாயிரத்தில் ஒறைக்காண்போம்.

"மைத்தவிட பணிப்பணியான் வராசனமுஞ்
சராசனமு மலையாக்கொண்ட
சித்தனுதயர் சிவனிமான்மிய மதனைச்
செந்தமிழாற் றெரித்தல் செயதா
நத்தகைய பபார்த்து வாசகோத்
திரனங்க நருளு மைந்தன்
சத்த புரீ களிற் காசி நகர் வரத
பண்டிதன் முத்தமிழ் வல்லோனே"

(அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
ஆசிரியர் திரு மாணிக்கம் தவதுரை
Master Knowledge Educational Services